
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 [illegible] இதழ் - 4



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z.** செல்வநாயகம் அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/— மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | " நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ " | 1 |
| 2. | வேனிற்கால வேதாகம முகாம் | 9 |
| 3. | கொடுப்பது எப்படி? | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 14 |
| 5. | தெரிந்து கொள்ளுங்கள் | 19 |
| 6. | வாலிபர் பகுதி | 23 |
| 7. | சபையை ஸ்தாபித்தது யார்? | 26 |
| 8. | அன்பின் தோற்றம் | 29 |
| 9. | பிதாவே இவர்களுக்கு மன்னியும். | 31 |

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C.CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 12** **APRIL -1999** **Issue -4**

*ஆசிரியவுரை*

# "நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ?"

உலகத்தில் பிறந்த எந்தவொரு மனிதனுக்கும் "கேள்வி" என்பது புதிதான ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில், கேள்வி கேட்பதும், கேட்கப்படுவதும், மனிதனுடைய பூமியின் வாழ்வுக்கு மிகவும் அவசியமானது. மனிதர்களாகிய நாம் சில சமயங்களில் அர்த்தமும், அவசியமும் இல்லாத கேள்விகளைக் கேட்டுவிடுகிறோம் என்பது உண்மைதான். இன்னும் சில சந்தர்ப்பங்களில் கேள்வி கேட்டுவிட்டு, அதிலிருந்து தப்பிக்க வழி தேடி அலைவதும் உண்டு. இருப்பினும், கேள்வி கேட்பதும் கேட்கப்படுவதும் மனிதனுக்கு தவிர்க்க முடியாத ஒன்றே. **"கேள்வியை"** நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, **"பதில்" பெற்றுக்கொள்ளும்படியாக கேட்கப்படும்கேள்வி.** இரண்டாவது, இதற்குப் **"பதிலே தேவையில்லை"** என்றளவில் கேட்டுகப்படும் கேள்வி. ஆம், சில கேள்விகளுக்கான பதில் கேட்கப்படும் கேள்வியிலேயே வெளிப்படையாக அடங்கியிருக்கும்.

சரி, "கேள்வி" கேட்பது மனிதனுக்கு மாத்திரம் சொந்தமானதென்று பெரும்பாலும் நாம் நினைத்தாலும், தேவனுக்கும் அதில் பங்கு இருக்கவே இருக்கிறது. ஆதியிலே **"ஆதாமே, நீ எங்கேயிருக்கிறாய்"** என்று ஆதியாகமம்

3-ம் அதிகாரத்தில் தொடங்கி, அர்த்தமும், நீதியுமுள்ள அநேக கேள்விகள் அவரால், அவ்வப்போது கேட்கப்பட்டு வந்துள்ளது. தேவனால் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்தும், கிட்டத்தட்ட பதிலே தேவையில்லையென்றளவில் கேட்கப்பட்டவைதான். அப்படிப்பட்டவைகளில் ஒன்றுதான், இம்மாதத் தலைப்பாக நமக்குக் கிடைத்துள்ளது.

பரலோகத்தின் தேவனால் எழுப்பப்பட்ட ஏராளமான கேள்விகளுள், **“நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ?** (எரே 23:23) என்பது, தனித்து விளங்கும் தன்மையுடையது. இதன் பின்னணி கடுமையான கவலைக்குரியதாக இருந்தாலும், சூடான சுவாரசியம் கொண்டது. சர்வ வல்ல தேவனால் இப்படியொரு கேள்வி கேட்குமளவுக்கு நிலைமை நிமிர்ந்திருக்கிறதென்று சொன்னால், அன்றைய நாட்களின் அவலம் எந்தளவு ஆழம் கொண்டதாக இருந்திருக்குமென்று நீங்களே அனுமானித்துக் கொள்ளுங்கள்.

இருப்பினும், தலைப்பை இன்னும், சரியாகப் புரிந்து கொள்வதற்கு, இதன் பின்னணி அவசியமானதால், கொஞ்சம் சொல்லுகிறேன்.

எரேமியாவின் ஊழிய நாட்களில் இக்கேள்வி கேட்கப்பட்டுள்ளது. கி.மு. 627-ஆம் அண்டு வாக்கில் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு, ஆசாரிய குடும்பத்தில் பிறந்த இவன் அழைக்கப்பட்டான். மாபெரும் தீர்க்கனாகிய ஏசாயாவிற்கு, சுமார் 100 ஆண்டுகள் கழித்து இப்பணிக்கு வந்தவன். இச்சீரிய பணியை இவன் ஏற்றுக்கொண்ட போது, யோசியா யூதாவை அரசாட்சி செய்து வந்தான். ஏசாயாவைப்போல் அசீரியரிடமிருந்து யூதாவைக் காப்பாற்றும் தன் முயற்சியில் இவன் வெற்றியடைய முடியவில்லையென்பது உண்மைதான். ஒருவேளை தன் முயற்சியில் இவன் தோற்றுப் போயிருந்தாலும், தேவன் தன்னிடம் ஒப்படைத்த பணியிலிருந்து அவன் பின்வாங்கிப் போகவில்லை. இத்தனைக்கும், தன் உயிருக்கு ஆபத்து வந்தபோது கூட அவன் நிலைதடுமாறிப் போகவில்லை (எரே: 26:7-16) யூதாவின் மக்கள் திருந்துவதற்கான வாய்ப்பே இல்லையென்பது திருஷ்டாந்தமாகத் தெரிந்த நிலையிலும் துவண்டுவிடாமல், தன் சீரிய பணியை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக திறம்படச் செய்தான்.

தெற்கு இராஜ்யமாகிய யூதாவை, மனந்திரும்புதலுக்குள் வழிநடத்த தேவனால் மேற்கொள்ளப்பட்ட கடைசி முயற்சி என்று எரேமியாவின் ஊழியத்தைக் குறிப்பிடலாம். ஒருவேளை இவனுக்கு அவர்கள் செவிகொடுத்திருந்தால் அழிவுக்கும், சிறையிருப்புக்கும் தப்பியிருக்கலாம். ஆனால், ஜனங்கள், வழக்கம்போல் வணங்காக் கழுத்துள்ளவர்களாகவே

இருந்தனர். ஆகவே, தேவன், வரப்போகும் நியாயத்தீர்ப்புக்குக் காரணம் இது தான் என்று பட்டியலிட வேண்டியதாயிற்று. அந்தப் பட்டியலின் தொடர்ச்சியை நாம், நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 23-ம் அதிகாரத்திலும், காண முடியும்.

தொடர்ந்து வரும் வசனப்பகுதியில் நாம் ஒன்றைக் கவனிப்பது அவசியம். அங்கே, கள்ளத்தீர்க்கதரிசிகளின் செயல்பாடுகள், தயவு தாட்சண்யமின்றி, தேவனுடைய மனிதனால் விமர்சிக்கப்படுகிறது. இப்படி விமர்சிப்பது இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் நிலைக்கு, முற்றிலும் விரோதமான ஒன்றாகும். எப்படியெனில், ஊழியம் என்ற பெயரால், என்ன அட்டூழியம் நடந்தாலும், கிறிஸ்தவம் வாய்மூடி மௌனியாவே நிற்கிறது. கேட்டால் அது அறிவுக்கும் அடக்கத்திற்கும், பெருந்தன்மைக்கும் அடையாளம் என்று வெட்கமில்லாமல் சொல்கிறது. உண்மையில் அது அறியாமையின் அறிகுறியே. நியாயத்தைப் பேசுவதற்கு, நல்லவன் ஒருவனின் நா தழு, தழுக்கக்கூடாது. அநியாயத்தைக் கண்டிப்பதற்கு ஏன் ஒருவன் அடக்கி வாசிக்கவேண்டும்? இன்றைக்கு ஆன்மீகத்தில், குறிப்பாக கிறிஸ்தவ அறத்தில் அசிங்கங்கள் தலைவிரித்தாடுவதற்குக் காரணம், அநேகரின் அறியாமையும், அறிந்தவர்களின் அடக்கி வாசித்தலும் தான். இக்காரியத்தில், நீதியை விரும்பும் ஒவ்வொருவரும் எரேமியாவின் வழி நடப்பது அத்தியாவசியம்.

தேவன் கள்ளத்தீர்க்கதரிசிகளின் கொடுஞ்செயலை, எரேமியாவைக் கொண்டு எப்படிப் புட்டுப்புட்டு வைக்கிறார் என்று பாருங்கள். இப்படி செய்வதற்கு அவரிடம் எந்த தயக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை. அவரின் கடுமையைக் கொஞ்சம் கவனியுங்கள். **"எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தை காண்கிறேன்: விபச்சாரம் பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத்திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள். (23:1). அடுத்து, "உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்;அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல; தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் (23:16). இன்னும், "அவர்கள், அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி: உங்கள் மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்"** (23:17)இத்தோடு முடியாமல், மேலும் கூட தொடர்வதை நாம் வாசிக்க முடியும்.

சரி, இப்படிப்பட்ட துணிகரத்தைக் குறித்த தனது உணர்வுகளை அழுத்தமாக அறிவிக்கும் தேவன், **இவர்களுடைய காரியங்களெல்லாம் தன் முன்னே நிற்கிறதென்பதை** அவர்கள் அறிந்து கொள்ளும்படியாய், 23,24-ம் வசனங்களில்

இவ்விதம் பேசுகிறார். "**நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று" யாவனாகிலும், தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ" என்று கர்த்தர் சொல்லுகிறார்.** இன்னும் இதே அதிகாரத்தின் வேறு இடங்களில், தனது வல்லமையை வெளிப்படுத்தும்படியாய் பொல்லாப்பைக் **கண்டேன் என்றும்** (வ.11), திடுக்கிடத்தக்க காரியத்தைக் **காண்கிறேன் என்றும்** (வ.14)பொய் தீர்க்கதரிசனத்தைக் **கேட்டேன் என்றும்** திட்டமாகக் கூறியுள்ளார்.

ஆனால், அன்றைய நாட்களின் யதார்த்த நிலை வெகுவாக வேறுபட்டிருந்தது. ஆம், தாங்கள் செய்கின்ற எந்தவொரு அநியாயமும், தேவ விரோதச் செயலும் தேவனுடைய சமூகத்தில் போகாது என்ற மமதை அரசியல் தலைவர்களிடமும், மத குருக்களிடமும், திருட்டுத் தீர்க்கதரிசிகளிடமும் மேலோங்கியிருந்தது. **தான் செய்வது நியாயம் என்றளவில் செய்யப்பட்ட தவறுகளைக் காட்டிலும், என் காரியத்தைக் கவனிப்பாரில்லை என்றளவில் செய்யப்பட்ட தீமைகளே மிகுந்திருந்தது.**

தேவன், இவர்களின் தவறான எண்ணத்தைத் தரைமட்டமாக்கும் விதமாய்த்தான் நான் எல்லாவற்றையும் **கண்டேன், காண்கிறேன், கேட்டேன், கேட்கிறேன்,** என்று கூறியதோடு தான் எங்கும் நிறைந்திருக்கும் தேவன் என்பதை, துளியும் சந்தேகத்திற்கிடமின்றி, இதன்மூலம் தெரிவித்துவிட்டார். இக்கருத்துக்கு வலுசேர்க்கும் வேறு வசனங்களும் வேதாகமத்தில் வேண்டியளவு உண்டு. சங்கீதம் 139-ஐ வாசித்துப் பாருங்கள். இன்னும் நீதி 15:3, அப்:17:22-28 போன்ற பகுதிகளையும் படியுங்கள்.

சரி, இப்பொழுது எரேமியாவின் நாட்களுக்கு நாம் விடைகொடுத்துவிட்டு, நம்முடைய **தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல், தூரத்திற்கும் தேவனாயிருப்பதால்,** இதிலிருந்து நாம் என்னத்தைக் கற்றுக் கொள்ளுமுடியுமென்று பார்ப்போம்.

## I தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பாவத்திற்கு விலகியிருக்க வேண்டும்

முதலாவது, நம்முடைய தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல், தூரத்திற்கும் தேவனாயிருப்பது, நம்மை பாவத்திற்கு விலகியிருக்கும்படி செய்யவேண்டும். தேவனுடைய பார்வை பரந்து விரிந்திருப்பதாலும், அவருடைய கண்களுக்கு மறைவாக நாம் எதையுமே செய்யமுடியாது என்று

அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறபடியாலும் அவருக்கு விரோதமாக பாவம் செய்வதில் நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது. அவர் எல்லா இடங்களிலுமிருந்து எல்லாவற்றையும் பார்த்து, எல்லாவற்றையும் கேட்கிறபடியால், நம்முடைய பேச்சு, செயல், நடக்கை எல்லாவற்றிலும் நாம் மிகுந்த எச்சரிப்புள்ளவர்களாக இருப்பது அவசியம்.

ஆனால், இக்காரியத்தில் நம்முடைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு இருக்கிற குறைந்தபட்ச அறிவு கூட, தேவனுக்குப் பயப்படுகிறோம் என்று சொல்கிற பெரியவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆம், பெரும்பாலான சமயங்களில், குடும்பங்களில் பிள்ளைகள் தவறு செய்வதற்குப் பெற்றோர் இல்லாத சந்தர்ப்பங்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். அதாவது, பெற்றோரின் பார்வைக்கு முன்பாக தவறு செய்யக்கூடாது என்கிற பயம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், ஆவியின் தேவனுக்கு முன்பாக - அவருடைய பார்வைக்கு முன்பாக, பாவம் செய்யக் கூடாது என்ற பயம், நமக்கு இருக்கிறதா? அவர் தூரத்திற்கும் தேவனாயிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தும் நாம் பாவம் செய்வோமானல், அது **துணிகரமான பாவமாகும்.** துணிகரமான பாவம் கடுமையான தண்டனைக்கு ஏதுவானதென்பதை தாவீது அரசன் நன்றாக அறிந்துதான், மிகுந்த பயத்தோடு இந்த வசனத்தை எழுதியுள்ளார். **"துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமானகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். (சங் -19:13)**

நீதிமானாகிய யோபு, உத்தமன் என்றும், சன்மார்க்கன் என்றும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனென்றும் பெயரெடுத்தவன் (1:8) யோபுவைக் குறித்து ஏராளமாகக் கேள்விப்பட்டு, அதிகமாகப் படித்திருக்கும் நாம், அச்சிறப்பு அவனுக்கு எப்படிக் கிடைத்ததென்று எப்போதாவது அலசி ஆராய்ந்து பார்த்திருக்கிறோமா? யோபு, தன்னைப் பற்றிச் சொல்லும்போது, **"ஆகையால் அவருக்கு முன்பாக கலங்குகிறேன்; நான் சிந்திக்கிறபோது, அவருக்கு பயப்படுகிறேன்"** என்று கூறுகிறான் (யோபு :23:15) இங்கே, கவனித்தீர்களா? பெரும்பாலானவர்களாகிய நாம் பரலோகத்தின் தேவனுக்கு விரோதமாக, பாவமான **செயல்கள்** பல செய்யும்போது கூட பயப்படாதபோது, பக்தன் யோபு, தேவன் பற்றி **சிந்திக்கும்போதே** பயப்பட்டிருக்கிறான். அப்பப்பா, நமக்கும், அம் மாமனிதனுக்கும் எவ்வளவு வேறுபாடுகள்? **தனது சிந்தையில் பயப்பட்ட யோபு எங்கே?** தேவனுக்கு விரோதமான தனது **பகிரங்க செயலுக்குக் கூட வருத்தப்படாத இன்றைய கிறிஸ்தவம் எங்கே? எங்கே?**

யோபு, தேவனுக்குப் பயந்து வாழ்ந்ததின் மூலம், **தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல் தூரத்திற்கும் தேவனாயிருக்கிறார் என்பதை**

**மனப்பூர்வமாக அங்கீகரித்தான்.** ஆகவே தான். தேவன் தன்னைக் காண்கிறார் என்று பயந்து வாழ்ந்தான். பாவத்திற்கு விலகினான். ஆகையால். நாம் ஒவ்வொருவரும் எரேமியாவின் நாட்களில் வாழ்ந்து விடாதபடி. யெகோவா தூரத்திற்கும் தேவன் என்பதை ஏற்று. பாவமான சகல காரியங்களுக்கும் விலகியிருப்போம். ஏனெனில், பாவம் நம்மை இறுதியில் நரகத்திற்கு கொண்டு போய் சேர்த்துவிடும்.

## II தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு நம்பிக்கையைத் தரவேண்டும்.

இரண்டாவதாக, **“தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல் தூரத்திற்கும் தேவனாயிருக்கிறார்''** என்பது. நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகுந்த ஊக்கத்தையும் திடநம்பிக்கையும் தரவேண்டும். அவர் பரலோகத்திலும். நாம் பூமியிலும் இருந்தாலும் அவர் எப்போதும் நமது அருகாமையில் இருக்கிறார் என்ற உணர்வை, பாதுகாப்புணர்வை நமக்குக் கொடுக்க வேண்டும்.

முற்பிதாக்களில் ஒருவனாகிய யாக்கோபு,தனது மாமன் ஊராகிய பதான் அராமுக்குப் புறப்பட்டுப் போனபோது, தேவன் அவனுக்குத் தரிசனமாகி **“நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்''** (ஆதி 28:15) யாக்கோபைத் தேவன் போகிற இடத்திலெல்லாம் கைவிடாமல் காத்து நடத்தினதுண்டானால், அவருக்கு பயந்து வாழ்கிற மற்றவர்களை மாத்திரம் கைவிட்டுவிடுவாரா என்ன? இல்லை, மாட்டார். உண்மைப் பிள்ளைகளுக்கு இது எவ்வளவு ஆறுதலையும், நம்பிக்கையும் தருகிறதென்று பாருங்கள்! பட்சபாதமில்லாத தேவன் அவருக்குப்பயப்படுகிற அனைவருக்கும் அப்படியே செய்வார். சந்தேகமே வேண்டாம்.

தேவனுக்கு உண்மையாக பயந்து வாழும் எந்தவொரு மனிதனும், நான் தனிமையில் இருக்கிறேன், ஆதரவற்றிருக்கிறேன், கேட்பாரற்றிருக்கிறேன், ஆபத்து சூழ்ந்த நிலையிலிருக்கிறேன் என்றெல்லாம் கலங்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தேவன் தூரத்திற்கும் தேவனாயிருந்து, அவருடைய கண்கள் அவருடைய பிள்ளைகள் மேல் நோக்கமாயிருக்கிறபடியாலும், அவரின் செவிகள் அவருடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கும், கூப்பிடுதலுக்கும் திறந்திருக்கிறபடியாலும் தேவனின் பரிசுத்த பிள்ளைகளைத் தாங்குவதற்கு அவருடைய கரங்கள் விரைந்து செயல்படுவதாலும், கலக்கமும் திகிலும்,

ஒருவனுக்கு அவசியமற்ற ஒன்று. மாந்த அறிவால். விளங்கிக் கொள்ள முடியாத அற்புத வழி நடத்துதல் எப்பொழுதும் அவருக்கு சொந்தமானது.

அன்பானவர்களே. பழைய. புதிய ஏற்பாடுகளிலிருந்து எண்ணிலடங்காத உதாரணங்களை நாம் இதற்குக் காட்டலாம். யோசேப்பின் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள். **தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல், தூரத்திற்கும் தேவனாக இருக்கிறார்** என்பதை ஏற்று, அவருக்குப் பயந்து வாழ்ந்தபடியால், தேவனின் உன்னத பாதுகாப்பு அவனுக்குக் கிடைத்தது. படுகுழியில் இருந்து போத்திபாருடைய வீட்டிற்கும். சிறைச்சாலையிலிருந்து சிம்மாசனத்திற்கும் உயர்த்தப்பட்டான். இன்னும், எஸ்தர், தாவீது என்று அநேகருடைய வாழ்க்கையை நாம் கவனித்தால். அவரின் தெய்வீக பாதுகாப்பு எவ்வளவு அலாதியாதென்பது விளங்கும்.

## III பாவிகளுக்குப் பயத்தை ஏற்படுத்த வேண்டும்

இறுதியாக, **'தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல் தூரத்திற்கும் தேவனாயிருப்பது**, அவருக்குப் பயப்படாதவர் மத்தியில் பயத்தையும் கலக்கதையும் ஏற்படுத்த வேண்டும். அவர் தூரத்திற்கும் தேவனாயிருக்கிறபடியால், அவருடைய பார்வைக்கு ஒருவரும் தப்ப முடியாது என்ற எண்ணம் அழுத்தமாக ஏற்படவேண்டும்.

எரேமியா தீர்க்கனுடைய நாட்களிலிருந்த மார்க்க மேதாவிகளுக்கு, இந்த அடிப்படை உண்மை கூடத் தெரியாதபடியால் தான், அனர்த்தமான காரியங்களை அடுக்கடுக்காகச் செய்து தேவ கோபத்திற்கு ஆளாயினர். அவர்களின் இந்த ஆன்மீக அத்து மீறல்களுக்குக் காரணம், தாங்கள் செய்கின்ற எதுவுமே தேவனுக்குத் தெரியாது என்பதே. ஏனெனில் தேவன் தூரத்திலிருக்கிறார் என எண்ணி தங்கள் துன்மார்க்கத்தில் மூழ்கி திளைத்தனர், விளைவு? தேவன் **எல்லாவற்றையும் கண்டு, கேட்டு அவர்களை நிச்சயமாகவே தண்டித்தார்.** தண்டித்தார் என்பதை விட அவர்களை அழித்தார் என்பது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

அருமையானவர்களே! தேவனுடைய சமூகத்திலிருந்து எந்த துன்மார்க்கரும். பாவியும் தப்ப முடியாது என்பதை மறந்து விடாதீர்கள். ஆதாமும், ஏவாளும் சாத்தானுக்குச் செவிகொடுத்து தேவ கட்டளையை மீறி பாவம் செய்தபோது கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின்

விருட்சங்களுக்குள்ளே தங்களை ஒளித்துக் கொண்டார்கள். ஆனால், அப்படி ஒளிந்து கொள்ளமுடியாது என்பது சிறிது நேரத்தில், அவர்களுக்கு ஒரு திகிலுடன் தெளிவுபடுத்தப்பட்டது. (ஆதி: 3:8-10).

இன்னும் யோனா தீர்க்கனின் நினைவுகள் எரேமியா காலத்து எண்ண ஓட்டத்தை அப்படியே பிரதிபலித்தபடியால் தான். **"கர்த்தருடைய சமூகத்திலின்று விலகி"** தர்சீசுக்கு ஓடிப்போகும்படி பிரயத்தனப்பட்டான். ஆனால், என்ன நடந்தது என்று நமக்கு தெரியும். கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, ஒருவாறாக, மீன் வயிற்றில் அடைக்கலம் கொடுக்கப்பட்டு, பிறகு நிமிர்ந்து நடக்க வழியின்றி, நினிவேயின் வீதிகளில் தாழ்ந்த தலையுடன் சுற்றிவந்து பிரசங்கித்தான். தேவனின் வளைத்துப் பிடிக்கும் இந்த தன்மையை நாம் சங்கீதம் 139:1-11 வசனப் பகுதிகளில் இன்னும் தெளிவாகக் காண முடியும்.

ஆகையால், சத்தியம் விரும்பிகளே, ஒருவேளை நாம் தேவனுக்கு முற்றிலும் பயப்படாதவர்களாகவோ அல்லது பயப்படவேண்டிய அளவுக்கு பயப்படாதவர்களாகவோ இருந்தால், நமது நிலையைச் சீர்தூக்கிப் பார்ப்பது இப்பொழுது அவசியம். ஏனெனில், **தேவன் தூரத்திற்கும் தேவனாயிருந்து எல்லாவற்றையும் பார்க்கிறபடியாலும், அவருடைய சமூகத்தினின்று தப்ப முடியாதென்பதாலும், நம்முடைய பாவமான-துன்மார்க்கமான வாழ்வுக்கு நாம் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.** இல்லையேல், ஞானி சாலமோன் சொல்லுவதுபோல் ஒரு நாளில், **"ஐயோ போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே என்று முறையிட வேண்டிவரும்** (நீதி:5:12).

தேவனுக்குப் பயப்படாமல் துன்மார்க்கத்தில் தொடர்ந்து ஈடுபடுவோரின் நிலை, நியாயத்தீர்ப்பில் எவ்வளவு பரிதாபமாக இருக்கும் என்பதை, யோவான் இங்கே வெளிப்படுத்துவதைப் பாருங்கள். **"…. பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவரின் கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினயின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலை நிற்கக் கூடும்"** என அலறுவார்கள். (வெளி :6:6-17).

ஆம், தேவனை நேசிக்கும் பிள்ளைகளே, நண்பர்களே, "தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவனாயிராமல், தூரத்திற்கும் தேவனாயிருக்கிறார் என்ற பேருண்மையை நமது வாழ்வில் மெய்யாக அறிந்து, ஆன்மீகத்தில் அடி பிறழாத வாழ்க்கை வாழ அடியேன் மன்றாடுகிறேன்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!

காங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்தும்

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : *YMCA* **வளாகம், ஏலகிரிமலை** (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

நாள் : **மே மாதம் 3, 4, 5, தேதிகள் (திங் — புதன்) — 1999**

## சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தலைசிறந்த ஊழியர்கள்
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்பவெப்பம்.
- குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை
- பெண்களுக்கு தனி இடவசதி

உணவும், தங்குமிடமும் இலவசம்
பதிவுக் கட்டணம் ரூ. 75/- மட்டுமே

தொடர்பு முகவரி : **கிறிஸ்துவின் சபை**
**195, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701**
Phone: 04257-20030

குறிப்பு : **சுமார் 250 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# கொடுப்பது எப்படி?

"நீங்கள் இருக்குமிடத்தில் சபை தொடங்குவது எப்படி?" என்ற தொடர் பாடத்தில், காணிக்கை கொடுப்பது எப்படி என்று இப்பொழுது பார்க்க உள்ளோம்.

நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபை ஒன்றை தொடங்குவதாக இருந்தால், தேவனை ஆராதிக்கும்படியாய், வாரத்தின் முதல்நாளிலே கூடிவரவேண்டுமென்பது குறித்து சிந்திக்க வேண்டும். ஜெபம், பிரசங்கம், பாடல், கர்த்தருடைய பந்தி ஆகியவற்றோடு, கர்த்தருடைய வேலைக்காக, கூடி வந்துள்ளவர்கள் கொடுக்கும்படியான ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். இதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, கொடுத்தலின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் சில வேத வசனங்களைக் கவனிப்போம்.

கொடுத்தலைப்பற்றிய போதனைகளும், முன்னுதாரணங்களும் வேதாகமத்தில் நிறைந்து கிடக்கிறது என்பது நமக்குத் தெரியும். உலகத்தின் பாவங்களுக்காக, சிலுவையில் சாகும்படியாக தேவன் தம்முடைய குமாரனையே கொடுத்தார்(யோவா. 3:16) மனிதன் இரட்சிக்கப்படும்படியாய் கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுத்தார் (I யோவா 4:4) கொடுத்தலில் இதைவிடச் சிறந்த முன்மாதிரி எதுவாக இருக்க முடியும்? ஆனால், அந்தக் கர்த்தருக்கு நாம் என்னத்தைக் கொடுக்கிறோம்? நாம் எவ்வளவு கொடுக்க முடியும்?

ஒரு சமயம், வாலிபன் ஒருவன், உலக ஆஸ்திக்கு அளவில்லாத முக்கியத்துவம் கொடுப்பதை இயேசு அறிய நேர்ந்த பொழுது, நீ இரட்சிக்கப்பட வேண்டுமானால், போய் உன்னிடத்திலுள்ளதை விற்று தரித்திரருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார் (மத் 20:21) அப்போஸ்தலரில் லூக்கா ஆசிரியர் சொல்லும்போது, "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசு சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள் என்கிறார். (அப் 20:35)

அப்போஸ்தலன் பவுல், கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன் (I. கொரி 16:1,2)

பவுலின் இந்த வார்த்தைகளில் பல உண்மைகள் அடங்கியுள்ளது. முதலாவது, எந்த நாளில் ஒருவன் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டுமென்று ஒரு நாளை அடையாளப்படுத்துகிறார், அந்த நாள் வாரத்தின்

முதல் நாள், வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்காக சீஷர்கள் கூடி வந்த போது, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள் என்று நாம் அப்போஸ்தலர் 20:7-ல் வாசிக்கிறோம். வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்காக கூடி வருகிறபடியால், தங்கள் வருமானத்திலிருந்து கர்த்தருக்குக் கொடுப்பதற்கு, அது இயல்பாகவே, நல்ல நேரமாகிவிடுகிறது.

இரண்டாவதாக, தன் தன் வரவுக்குத்தக்கதாக என்று சொல்கிறபடியால், கடந்துபோன வாரத்தில் வருமானமாகிய வரவைப் பெற்ற ஒவ்வொருவரும் கொடுத்தலில் பங்குபெற வேண்டுமென்று கூறுகிறார். ஒருவனுக்கு எந்த வருமானமும் இல்லையென்றால், கொடுப்பதற்கு அவனிடம் ஒன்றுமிருக்காது. இச்சமயத்தில், கொடுக்கமுடியவில்லையே என்று ஒருவன் வருத்தமடையத் தேவையில்லை, ஏனெனில் அவன் கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் அவனிடத்தில் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், அவன் சம்பாதித்து வருமானம் பெற்றிருந்தால் அவன் கொடுக்க வேண்டும் வருமானம் பெற்றிருந்தும், ஒருவன் கொடுக்கவில்லையானால் அது, கர்த்தருக்குச் சொந்தமானதைத் திருடுவதற்குச் சமம்.

மூன்றாவதாக, பவுல், தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன் என்று சொல்கிறார். இப்பொழுதெல்லாம், கொடுத்தல் என்றாலே நாம் பொதுவாக பணமாகக் கொடுத்தல் என்று தான் எண்ணுகிறோம். ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள், கொடுப்பதற்கும் பணமாக இல்லாமல் தங்களிடமிருந்த மிருகங்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைக் கொடுத்து, அவைகள் பணமாக்கப்பட்டு கர்த்தருடைய வேலைக்காய் பயன்படுத்தப்பட்ட நாட்கள் இருந்திருக்கலாம். இன்றைக்கும், உலகத்தின் பல பாகங்களில், பல கிறிஸ்தவர்கள், பணமாகக் கொடுக்கமுடியாமல், மற்றவைகளைக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கலாம், உதாரணமாக, ஊழியருக்கு, கோழி, முட்டைகள் போன்ற பொருள்களைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கலாம். கண்டிப்பாக, அவைகளும் காணிக்கையாகவே கருதப்படும்.

நான்காவதாக, தன் தன் வரவுக்குத்தக்கதாக, கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். அதன் பொருள், தங்கள் சம்பாத்தியத்தில் ஒரு பங்கை தேவனுக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அப்படியானால், ஒரு பங்கு என்பது எவ்வளவாக இருக்கவேண்டுமென்பது, ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவுக்கு விடப்படுகிறது. ஏனெனில், அது எவ்வளவாக இருக்க வேண்டுமென்பது ஒவ்வொருவருக்கும் தெரியும் யூதர்கள் பத்தில் ஒரு பங்கு, தங்கள் வருமானத்திலிருந்து கொடுத்தார்கள்.

அவர்களின் மற்ற பலிகளையெல்லாம், கணக்கிலெடுத்துப் பார்க்கும் போது, பத்தில் ஒரு பங்குக்கும் கூடுதலாகவே கொடுத்துள்ளார்களென்பது விளங்கும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மேலான சட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு ஒரு

இரட்சகர் உண்டு. அதுமாத்திரமல்ல, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நமக்குண்டு. பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த யூதர்களைக் காட்டிலும், நாம் கண்டிப்பாக குறைவாகக் கொடுக்கக் கூடாது.

இறுதியாக, பரிசுத்தவான்களின் குறைவில் உதவும்படியாக அங்கு கொடுக்கப்பட்டுள்ளது. தான், வரும்போது எல்லாம் ஆயத்தமாக இருக்கும்படி கொடுக்க வேண்டுமென்கிறார். தேவனுடைய பிள்ளைகள் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுத்தால், எந்தப் பிரச்சினையும் இல்லாமல், அவருக்காகச் செய்யப்படவேண்டிய வேலைகள் செய்யப்பட்டுவிடும். தன்னுடைய வேலைக்காக, தேவன் உலகத்து மக்களை கண்டிப்பாக எதிர்பார்ப்பதில்லை. உலகத்தாரிடமிருந்து வந்தவைகள் வேண்டாமென்று ஒதுக்கப்படவுமில்லை அவர்களிடம் கேட்கப்படவுமில்லை.

அதே கொரிந்தியருக்கு பவுல் பின்னாளில் எழுதும்போது, "பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில் சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில், தேவன் பிரியமாயிருக்கிறார் (II கொரி 9:6,7)

இங்கே பவுல், கொடுத்தலின் தாற்பரியத்தைக் குறித்து, விதைத்தல், அறுத்தல் என்ற உதாரணத்தை வைத்து போதிக்கிறதைக் கவனியுங்கள். இந்த உதாரணத்தின் கருத்து, இன்றைக்குப் போலவே, அன்றைக்கும் எல்லோருக்கும் பரிச்சயமான ஒன்றாகவே இருந்தது. இதன் பொருள் என்னவெனில், அதிகம் விதைத்தால் அதிகம் அறுக்கலாம். கொஞ்சமாக விதைத்தால் கொஞ்சமாக அறுக்கலாம். இக்கொள்கை, விவசாயத்தில் மாத்திரம் உண்மையல்ல. வாழ்க்கையின் மற்ற பல காரியங்களுக்கும் இது பொருந்தும். உதாரணமாக கர்த்தருக்கு நீ அதிகமாகக் கொடுத்தால், கர்த்தர் உன்னை அதிகமாக ஆசீர்வதிப்பார். குறைவாகக் கொடுத்தால், குறைவானதைத் தான் நீ அவரிடமிருந்து எதிர்பார்க்கமுடியும். ஒருவேளை, ஒருவன், நிறைய பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அதிகம் கொடுத்தால், நோக்கம் சரியில்லாததால் அது எதிர்பார்க்கும் பலனைத்தராது. ஆனால், ஒருவன் உண்மையும், நேர்மையுமாக இருந்து, கர்த்தரில் அன்பு கூர்ந்து, உண்மையாகவே, தேவ சித்தத்தை நிறைவேற்ற முயற்சித்து, பிறகு கர்த்தருக்கு அதிகம் கொடுத்தால் அதற்கு கண்டிப்பாக பலனிருக்கும். அவன் அதிகமாக, ஆசீர்வதிக்கப்படுவான்.

கொடுக்கிற விஷயத்தில், அநேகர் தேவனை வஞ்சிப்பதால், அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அவர்கள் சுயநலமுள்ளவர்களாயிருந்து தங்கள் தேவைகளை, கர்த்தரைக் காட்டிலும் முன்னிலைப்படுத்துகிறார்கள். அப்படிச் செய்துவிட்டு, தேவன் எங்களை ஏன் ஆசீர்வதிப்பதில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய

நீதியையும் தேடுங்கள். அப்பொழுது எல்லாம் கொடுக்கப்படும் என்ற வேதவசனத்தை ஒருவன் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் (மத். 6:33) இந்த வசனம் சரியில்லையா என்று முயற்சித்துப் பாருங்கள்.

தொடர்ந்து பவுல் சொல்லும்போது, மனதில் நியமித்தபடி நாம் கொடுக்க வேண்டுமென்கிறார். நம்முடைய வருமானம் என்னவென்பது நமக்குத் தெரியும். நாம் என்ன கொடுக்கப் போகிறோம் என்பதை ஆராதனை கூடத்திற்கு வருமுன்பாகவே தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது, காணிக்கைத் தட்டோ, பையோ அல்லது கொடுக்க வேண்டிய தருணமோ வரும்போது, நாம் கொடுக்க முடியும். ஒருவேளை நாம் கடைசி நிமிடம் வரை காத்திருந்தோமானால், நாம் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது நாம் விரும்பியதைக் காட்டிலும் குறைவாகவோ கொடுக்க நேரிடலாம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியபடி, நாம் என்ன கொடுக்கப்போகிறோம் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது. நாம் கொடுக்கும் தருணத்திற்கு ஆயத்தமாக இருக்க முடியும்.

அடுத்து நம்முடைய கொடுத்தல் விசனமாகவோ, கட்டாயமாகவோ இருக்கக்கூடாது என்றும், மாறாக, உற்சாகமாக கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். கொடுக்க வேண்டிய ஒரு கட்டத்தில் சிக்கிக் கொண்டோமே என்றும், கொடுக்கக் கட்டாயப்படுத்துகிறார்களே என்றும் நினைக்கக் கூடாது. மாறாக, கொடுக்க வேண்டுமென்ற விருப்பத்தோடும், கொடுக்க முடிகிறதே என்ற மகிழ்ச்சியோடும் கொடுக்க வேண்டும். இந்த வகையாகக் கொடுப்பவரைத்தான், தேவன் நேசிக்கிறார் என்று கூறுகிறார்.

இப்பொழுது, கர்த்தருடைய நாளில் ஆராதனைக்குக் கூடி வந்திருக்கிறவர்களின் மத்தியில், காணிக்கைத் தட்டைக் கொண்டு செல்ல, ஒருவர் நியமிக்கப்படவேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படவேண்டும். காணிக்கைப் பகுதிக்கு முன்பாக, சரீரப்பிரகாரமாக, தேவன் கொடுத்தவைகளுக்கு நன்றி சொல்லி ஜெபிக்கலாம் கொடுப்பதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும். ஆராதனை முடிந்து, இரண்டுபேர் சேர்ந்து, அதை எண்ணித் தொகைபார்த்து, ஒரு ஏட்டில் முறையாகக் கணக்கு வைத்து, பிறகு அந்த பிராந்திய சபையின் பெயரில் ஒரு வங்கியில் போட்டு வைக்க வேண்டும். ஆண் அங்கத்தினர்களில் ஒருவர் பொருளாளராக நியமிக்கப்பட்டு, வரவு செலவுகளைக் கவனித்து அதை சபைக்கு வாராவாரம் அறிக்கை கொடுக்கச் சொல்லலாம். பிறகு, அந்தத் தொகையானது, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவும், சபையின் தேவைகளுக்கானவைகளை வாங்கவும், வறுமையிலும், தேவையிலுமிருப்போருக்குக் கொடுக்கவும் பயன்படுத்தலாம்.

தேவனுக்கான நமது ஆராதனையில், கொடுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்று என்பது நினைவில் இருக்கட்டும்.

**J.C. சோட்.**

பெண்கள் பகுதி

உண்மையைத் தேடி

# நீ இழந்து போனாய்

தூங்கும் தீமோத்தேயுவை தன் கரங்களில் ஏந்தியபடி அசையாமல் உட்கார்ந்திருந்தாள் ரேச்சல். காலையிலிருந்து ஓடியாடி விளையாண்டு களைப் புற்றதால் அவளுடைய மெல்லிய தாலாட்டுப் பாட்டு அவனைக் கண்ணயர வைத்தபடியாலும், அவருடைய கரங்களில் அசந்து படுத்துக் கொண்டிருந்தான்.விலைமதிப்பற்ற இந்தக் குழந்தையாலும், அதனால் கிடைத்த பொறுப்பாலும் அவளுடைய இருதயம் பூரித்திருந்தது. தன்னை சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை கூர்ந்து கவனிப்பவனாக, அவன் சுகத்தோடும், பலத்தோடும் வளர்ந்தான். அவனுடைய தலை முடியைக் கையில் கோதியபடி, நீ என்னவாக வருவாய்? என ரேச்சல் கேட்டாள். நீ பிறந்ததினால் என்ன மாற்றம் ஏற்படும்? நாங்கள் உன்னை எப்படி வழிநடத்துவோம்? உன்னுடைய வாழ்க்கையில் தேவன் முக்கியமானவராக இருக்க, நீ கற்றுக் கொள்ளும்படியாய் உனக்கு உதவும்படி நான் ஜெபிக்கிறேன்.

அப்பொழுது, ஆண்ட்ரூவின் சத்தம் கதவண்டையில் கேட்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். தீமோத் தேயுவை படுக்கையில் கிடத்திவிட்டு ஆண்ட்ரூவிடம் போய், "வேலையிலிருந்து வெகுசீக்கிரமாய் வந்து விட்டீர்களே" ஏதாவது "பிரச்சனையா' என்று கேட்டாள்.

"பிரச்சனை ஒன்றுமில்லை. ஆனால் நாம் இதுகாறும் படித்துக் கொண்டு வந்த காரியங்களை சிந்தித்தபோது,திடீரென ஒரு பயங்கர எண்ணம் மனதுக்கு வந்தது! வேதாகமம் என்ன சொல்கிறதென்பதைப் புரிந்து கொள்வதிலும், ஆதி ஜனங்கள் எப்படி இரட்சிப்பைப் பெற்றார்கள் என்றும், சபை என்பது பற்றியும், எந்தச் சபையில் சேருவது என்றும், இன்னும் இது சம்பந்தமான அநேக கேள்விகள் பற்றியும் மிகுந்த கவனத்தோடு படித்தோம். நான் வேலை செய்து கொண்டிருக்கும்போது "ஆண்ட்ரூ, நீ இழந்து போனாய்" என்ற எண்ணம் எனக்கு வந்தது. உன்னை நீ நல்லவனாகக் காண்கிறாய்.நாட்டுச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறாய், நல்ல கணவனாகவும், தகப்பனாயும் உள்ளாய். ஆகவே, இவைகளையெல்லாம் படிக்கும்போது சுகமான அனுபவத்தோடிருந்தாய். ஆனால், உண்மையென்னவெனில் நீ இன்னும் இரட்சிப்படையவில்லை." இந்த நிமிஷத்திலே நீ செத்திருந்தால் நித்திய காலமாய் இழந்து போயிருப்பாய். இயேசுவை நான் அதிகமாய் நேசிக்கிறேன் என்று நீ எண்ணுவதால், அவர் உன் இரட்சகராக இருக்கப் போவதில்லை. இப்பொழுது நீ ஒரு கிறிஸ்தவனாக இல்லை! ஆகவே, நீ இழந்து போனவன்!"

ஓ அப்படியா என்று கேட்ட ரேச்சலின் கண்களில் நீர் ததும்பியது. "தேவன் நம்மை பார்க்கிறவிதமாக நம்மை நாம் பார்க்கும்படியாக செய்து விட்டாய்! பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய குடும்பமாகிய சபையில்

பாதுகாப்பாகப் பிறப்பது மிகவும் அவசரமான காரியம் என்பதை உணராமல். நாம் எப்படி இவ்வளவு பாடங்களையும், கேள்விகளையும் படித்திருக்க முடியும்?"

"எனக்குத் தெரியவில்லை" என்று குழம்பிப்போயிருந்த ஆண்ட்ரூ பதிலளித்தான். ஆனால் இப்பொழுது கேள்வி, நாம் எப்படி ஞானஸ்நானம் பண்ணப்படப் போகிறோம்? என்பது நாம் புதிய ஏற்பாட்டில் என்ன படித்தோமோ அதைப் போதிக்கிறவர்கள் இங்கு யாரும் கிடையாது. ஆகவே நம்மை ஞானஸ்நானப்படுத்த இங்கு யாருமில்லை."

தங்களுடைய பிரச்சனையைக் குறித்து யோசித்துக் கொண்டு சில நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். இறுதியாக. "ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படுதல் என்று நமக்குத் தெரியும் என்று சொல்லிக் கொண்டு வேதாகமத்தை எடுத்து அப்: 2:38 -க்குத் திருப்பி. "நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் " என்றுள்ளதை வாசித்தாள்."ஆகையால். ஞானஸ்நானம் என்பது எப்படி செய்யப்பட வேண்டுமென்றும் அது பாவ மன்னிப்புக் கென்றும் புரிந்து கொள்கிறோம்."

ரேச்சலும். வேதாகமத்தைத் திறந்து மத்தேயுவில் தனக்கு ஞாபகமிருக்கும் வசனத்தை எடுத்தாள். "அங்கே. இயேசு பரலோகத்திற்கு திரும்பச் செல்வதற்கு முன்பாக அப்போஸ்தலர்களிடம் மத் 28:19, 20 - ல் "ஆகையால். நீங்கள் புறப்பட்டுப் போய். சகல ஜாதிகளையும் சீஷராக்கி. பிதா. குமாரன். பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து. நான் உங்களுக்குக் கட்டளை யிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ. உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் "என்றார்"

ஆண்ட்ரூ வேதாகமத்தைப் புரட்டிக் கொண்டே. இப்பகுதி ரோமரில் எங்குள்ளது? என்று கேட்டான். இதோ ரோமர் 6:3,4 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டது போல. நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு. அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

இந்த வசனப் பகுதிகளிலிருந்து இரட்சிப்பு பற்றி நாம் என்ன கற்றுக் கொண்டோமென்று ஒரு தாளில் இப்பொழுது எழுதுவோம் என்று ஆண்ட்ரூ யோசனை தெரிவித்தான்.

"முதலாவது. கிறிஸ்து தேவனு டைய குமாரனென்று நாம் விசுவாசி ப்பதால் ஞானஸ்நானம் பண்ணப் படுவதற்கு முன்பாக. நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறோம்."

"நீகிறிஸ்துவை விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள

முடியுமென்று பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு சொன்னபடியால் . அவன். இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டதை மறந்து விட வேண்டாம்." என்று ரேச்சல் நினைவு படுத்தினாள்.

'ஆம்" என்று ஆண்ட்ரூ ஒத்துக்கொண்டான் அவர் நம்மைப் பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்ய வேண்டுமானால். நாம் அவரை மனிதர்களுக்கு முன்பாக அறிக்கையிட வேண்டும். பிறகு ஞானஸ்நானம் பிதா. குமாரன். பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே இருக்க வேண்டும். இது பாவ மன்னிப்புக்கானது. ஞானஸ்நானம் பண்ணப்படுகிறவன்.பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்கிறது. ஞானஸ்நானம் பெறுகிறவன்.இயேசு அடக்கம் செய்யப்பட்டபடி. தன் பாவங்கள் கழுவப்படும்படியாய் தண்ணீருக்குள் அடக்கம் செய்யப் படுவதாகும். பிறகு. தேவனுக்கு முன்பாக. புதிய சிருஷ்டியாக அவன் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வருகிறான். ஒரு பாவி இவ்விதம் செய்யும்போது யோவான் - 3ல் வாசிக்கிறபடி அவன் மீண்டும் பிறக்கிறான். பிறகு தேவன். அவனை இயேசுகிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு மத்தேயு:16-ல் வாக்களித்தபடி சபையாகிய அவருடைய குடும்பத்தில் சேர்க்கிறார்."

" ஆகையால். இந்த வகையால் நாம் செய்தால். "ரோமர் 6-ல் சொல்லியுள்ளபடி அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப் பட்டிருந்தால். அவருடைய உயர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்."என்றாள் ரேச்சல்.

"சரி"இப்பொழுது நாம் வேதாகமத்தில் படித்த எல்லா வேதவசனங்களின்படி எப்படிப் பாவ மன்னிப்புப் பெறுவது. ஞானஸ்நானம் பெறுவது. சபையில் அங்கமாவது என்பதை சரியாகத் தெரிந்திருக்கிறோம் என்று சொல்லி முடித்தான். ஆண்ட்ரூ."

"ஆனால்."இவைகளின்படி எப்படிச் செய்வது "என்றாள். ரேச்சல்.

"சரி. ஒருவேளை. நாம் பாப்திஸ்து சபை பிரசங்கியாரிடத்தில் போய் ஞானஸ்நானம். இரட்சிப்பு. கிறிஸ்துவின் சபை போன்றவைகள் பற்றி வேதாகமத்தில் இதுகாறும் படித்தவைகளை எடுத்துச் சொல்லி பாப்திஸ்து சபையின் கொள்கைப்படி அல்ல. பாப்திஸ்து சபையில் சேரும்படியாகவும் அல்ல. தேவன் என்னை அவருடைய சபையில் சேர்க்கும்படியாக எங்களை நாங்கள் படித்தவைகளின்படியாக ஞானஸ்நானப்படுத்துங்கள் என்று கேட்பதை குறித்து நீ என்ன நினைக்கிறாய்? என்றான்.

ஏன். கூடாது. ஆண்ட்ரூ. நம்முடைய பிரச்சனைக்கு இது எவ்வளவு அழகான தீர்வு என்று ஆச்சரியப்பட்டு. அவளை ஆரத்தழுவும்படி குதித்து எழுந்தாள். "நாம் அவரைத் தொடர்புகொண்டு. அதை அவர் விரும்புகிறாரா என்றும். எப்பொழுது அங்கு வரலாம் என்று கேட்போம்."பிறகு அந்த நாளின் இரவிலே. ஆண்ட்ரூவும் தங்களது படுக்கையறையில் அமர்ந்திருந்தனர். வார்த்தைகள் எதுவும் பேசப்படாவிட்டாலும். இனிமையான சமாதானத்தின் உணர்வு அவர்கள் மத்தியில் இருந்தது. இறுதியாக ரேச்சல் போய் ஆண்ட்ரூவின் கரங்களை தன்

கரங்களால் பற்றிக் கொண்டாள்.'' நம்முடைய வாழ்க்கையில் இதுதான் சிறந்த நாள் இதற்கு முன்பு. நம்முடைய வாழ்க்கையில் இது தான்சிறந்த நாள்! இதற்கு முன்பு. நம்முடைய திருமணநாள்தான் சிறந்தநாள். அதன் பிறகு தீமோத்தேயு பிறந்தநாள். ஆனால் இனி நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்று அறிந்த நாளைக் காட்டிலும் சிறந்த நாள் இருக்கமுடியாது. உண்மையாகவே. தேவனை. நாம் தகப்பனென்று அழைக்க முடியும்.

ஆண்ட்ரூ, 'ஆம்' என்று பதிலளித்தான். வேதாகமத்தை நாம் புரிந்து கொண்டது பாப் திஸ்துகளைக் காட்டிலும் வேறுவிதமாக இருந்ததால் நம்முடைய புரிந்து கொள்ளுதலின்படி , என்னை ஞானஸ்நானப்படுத்தியது திரு. தாமஸ் அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்காது. ஆனாலும் அவர் இதில் உதவ முன்வந்ததற்கு நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

என்னை ஞானஸ் நானப் படுத்தும்படி உங்களைக் கேட்டது குறித்து நான் அதிக மகிழ்ச்சியாயிருக்கிறேன். ஆண்ட்ரூ என்றாள். உங்கள் கரங்களால் நான் மறுபடியும் பிறக்க நேர்ந்தது விசேஷமானது. நாம் செய்த எல்லாமே வேதாகமத்தில் நாம் படித்த மாதிரியா கவே செய்யப்பட்டுள்ளது என்று அறியும்போது. அதிக மகிழ்ச்சியையும். ஆத்தும திருப்தியையும தருகிறது.''

"எனக்கும் தான்" என்றான் ஆண்ட்ரூ. ஆனால் இது ஆரம்பம் மட்டுமே தன்னைப் பின்பற்றுகிறவர்கள் உலகமெங்கும் போய் நற்செய்தி அறிவிக்கும் படியாய் இயேசு சொல்லி யுள்ளார். ரேச்சல். நம்மைப்போல கிறிஸ்தவர்கள் உலகத்தில் இருக்கி றார்களா என்று தெரியாததினால் நாம் தனிமையாய் இருப்பதுபோல் உணருகிறோம். இருப்பார்கள் என்று நம்புகிறேன். கண்டிப்பாக அவர்களைக் கண்டுபிடிப்போம். ஆனால் அதுவரை நாம் படிப்பதற்கும். வளருவதற்கும் நிறைய உண்டு. இந்தப் பட்டணத்தில் வேதாகமம் என்ன சொல்கிறது என்று தெரிந்து அதைக் குறித்துப் பேசுவது நாம் மாத்திரமாக இருந்தால் நமக்கு மிகப்பெரிய பொறுப்பு உண்டு. நம்முடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு முன்பாக. நாம் இந்த சத்தியத்தின்படி வாழாவிட்டால். அதைப் புரிந்து கொண்டதாக எப்படியாகும்? நாம் கற்றதை மற்றவர்களுக்குப் போதிக்காமல் நாம் எப்படி அமைதியாக இருக்க முடியும்?

ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதிப்பதைக் குறித்து. முதலில் நாம் சிந்திக்க வேண்டும். என்றாள் ரேச்சல். ஆதிதிருச்சபை செய்தது போல கர்த்தரின் பந்தியில் பங்குபெற வேண்டுமானால். அவர்கள் உபயோகித்தது போல புளிப்பில்லாத அப்பத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அல்லது நான் அதைப்போல செய்ய வேண்டும். அது மாவு. தண்ணீர் இவைகளால் ஆனது தான். ஆகவே அதிக சிரமமில்லை. திராட்சை ரசத்தை நான் கடையிலே வாங்குவேன்.

'நான் தியானிப்பதற்கு. வேதாக மத்திலிருந்து ஒரு பாடத்தை திட்டம் பண்ணுவேன்." என்று முன் வந்து சொன்னான் ஆண்ட்ரூ. "வானத்தையும். பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும். அவரை அப்பா.

பிதாவே என்று அழைத்து. அவருடைய பிள்ளைகள் ஆராதிப்பதை அனுமதித் தவருமாகிய ஒருவருடைய சமூகத்துக்குப் போவது என்பது எப்படிப்பட்டது என்று ஒரு கனம் சிந்தித்துப்பார் எப்படியோ, தேவனை ஆராதிக்க முடிவது பயம் நிறைந்த ஒரு காரியம என்பதை நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

நாம் என்ன செய்தோம் என்பதைக் குறித்து . என் சகோதரியினிடம் பேச விரும்புகிறேன். அத்தோடு நமது தெருவில் உள்ள எலிசபெத்துடனும் பேசப் போகிறேன். இந்தக் காரியங்களை அவர்களும் புரிந்து கொண்டால் தேவனுக்கு கீழ்ப்படிய அவர்களும் விரும்புவார்கள் என்று நம்புகிறேன் நம்முடைய ஞாயிறு ஆராதனைக்கு அவர்கள் வந்தாலும் வரலாம். என்றாள், ரேச்சல்.

"அது அருமையான யோசனை" என்றான் ஆண்ட்ரூ. என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்யும் ஜானிடம் நான் ஏற்கனவே பேசிவருகிறேன்.ஞாயிறு வரவிரும்பு கிறாயா என்று அவனைக் கேட்கப் போகிறேன் ஜனங்கள் இரட்சிக்கப் படும்படியாய் சத்தியத்தை நேசிக்கிற மக்களுக்கு உதவ முடிவது எவ்வளவு உற்சாகமானது என்று நினைத்துப் பார்."

இதுகாறும், நாம் படிக்கிற காரியங்கள் நமக்கு புரிய தேவன் உதவி செய்ய வேண்டும் என்று ஜெபித்து வந்தோம். இப்பொழுது அவருடைய பிள்ளைகள் என்கிற புதிய உறவோடு ஜெபிக்க முடியும்'' அவன் தனது தலையைத் தாழ்த்தி இவ்விதம் ஜெபித்தான்.

"பரலோகத்தில் இருக்கிற தகப்பனே, நாங்கள் உம்மைப் புரிந்து கொள்ளவும், உமக்குக் கீழ்ப்படியவும் உதவி செய்ததற்கு நன்றி. எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாங்கள் இரட்சிக்கப் பட்டு விட்டோம் என அறிந்து, இருதய சமாதானத்தோடு இன்றிரவு படுக்கைக்குப் போக முடிந்ததற்காக நன்றி. உம்மை ஆராதிக்கும் படியாகவும், இந்த மாபெரும் உண்மைகளை நாங்கள் நேசிக்கி றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடிகிறதற்காகவும் உமக்கு நன்றி, எல்லாவற்றைக் காட்டிலும் தீமோத்தேயு வளரும்போது அவனை நித்திய காலமாய் தன்னை இரட்சித்துக் கொள்ளும்படியாய் அவனுக்குப் போதிக்க முடிகிறதற்காகவும் உமக்கு நன்றி. தகப்பனே, நீர் எங்களை ஏராளமாக ஆசிர்வதித்திருக்கிறீர், உமது அன்புக்காகவும், கர்த்தராகிய இயேசுவின் அன்புக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்தவன் என்ற நல்ல நாமத்தை இப்பொழுது நாங்கள் தரிக்க ஆரம்பித்திருக்கிறபடியால் எங்களுடைய பேச்சாலும், செயலாலும் அந்தப் பெயரை அவமானப்படுத்தாதபடி எங்களுக்கு உதவி செய்யும் உம்முடைய பிள்ளைகளாக இருப்பதற்காக நாங்கள் இப்படிச் செய்வோம் என்று சொன்ன உறுதியிலே உண்மையாயிருக்க உதவி செய்யும் இயேசுவின் நாமத்தில் இவையாவையும் கேட்கிறோம் பிதாவே, ஆமென்."

**B.B.சோட்**

**R.Rநாயகம்.**

**தெரிந்து கொள்ளுங்கள்**

# சபை என்பது என்ன?

## பாடம் - 2

**முன்னுரை**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்தப் பாடம் ஒரு முன்னுரையாக அமையும்.

**விவாதம்**

### I "சபை" என்ற வார்த்தை (மத் 16:13-20)

**A** **"எக்லீசியா"** என்ற கிரேக்க வார்த்தையில் **'எக்' (EK)**என்பதற்கு **"அதில் இருந்து"** என்றும், **"Klesis" (க்லிசிஸ்)** என்பதற்கு **"ஒரு அழைப்பு"**என்றும் பொருள்.

1. தங்கள் வீட்டிலிருந்தும் அல்லது வேலைகளிலிருந்தும் அழைக்கப்பட்ட ஒரு கூட்டம் என்று கிரேக்கர்கள் இதற்குப் பொருள் தந்தனர்.

2. "சுய ஆளுகைச் சமுதாயம் என்று கிரேக்கர்களுக்கு இவ்வார்த்தை அர்த்தம் அளித்தது. யூதனுக்கு இதே வார்த்தை, (தேவவழிகாட்டுதலின்படி) "கடவுள் ஆட்சி" செய்யும் சமுதாயம் என்று பொருள் தந்தது.

3. புதிய ஏற்பாட்டில் "Ekklesia" (எக்லீசியா) என்பது, ராஜாவுக்குக் கீழ்ப்படிந்ததினால், விடுதலையாக்கப்பட்ட சமுதாயம் என்று கூறப்பட்டுள்ளது.

### II சபைக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவு, மணவாட்டிக்கும், மணவாளனுக்கும் உள்ள உறவு போன்றது.

**A.** எபேசியர் 5:22-33-ஐ வாசிக்கவும்.

**B.** மேற்சொன்ன உறவு பற்றி பவுல் கூறுகிறார் **"இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்"**. தொடர்ந்து, **"இந்த இரகசியம் பெரியது"** நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். (எபே 5:31-32)

## III சபை என்பது கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட அநேக அவயவங்களின் சரீரம்.

A. 1 கொரி :12:12-27-ஐ வாசிக்கவும்.

B. சரீரத்திற்கு தலைபோல, கிறிஸ்து தலைமையேற்று ஆளுகிறார். (கொலோ 1:18, எபே 1:22-23)

## IV சபை என்பது தேவனுடைய குடும்பம்

A. சபையை "தேவனுடைய குடும்பம்" என்று பவுல் குறிப்பிடுகிறார். (1 தீமோ 3:15)

B. "வீடு" என்று சொல்லும்போது, பவுல் ஒரு கட்டிடத்தைப் பற்றிக் கூறாமல் ஒரு குடும்பம் என்றே சொல்கிறார். அநேக சமயங்களில் "வீடு" என்ற வார்த்தை குடும்பத்தையே குறிப்பிட்டு கூறுகிறது.(அப் 10:2,11:14,16:15)

1. எபேசியருக்கு எழுதும்போது பவுல் "பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாரும்" என்று அவர்களை அழைத்துள்ளார். (எபே 2:19)

2. 2கொரி 6:18-ல், தேவனுடைய குமாரர்களும், குமாரத்திகளும் என்றுள்ளது. தேவனுடைய குமாரரும், குமாரத்திகளும்தான் அவருடைய குடும்பத்தில் இருப்பார்கள்.

3. ஆகையால், வேதாகமம் தேவனுடைய வீடு என்று குறிப்பிடும் பொழுது அது சபையைப் பற்றியே பேசுகிறது.

## V. சபை என்பது தேவன் மற்றும் கிறிஸ்துவினுடைய ராஜ்யம்.

A. **இயேசுவோடுகூட இப்பூமியில் நடந்துதிரிந்த. சிலருடைய வாழ்நாட் காலத்திலேயே இந்த ராஜ்யம் வர வேண்டியிருந்தது (மாற்கு 9:1)**

1. ராஜ்யம் வருவது குறித்து பிரசங்கித்தான் (மத் 3:1-2) எப்பொழுது?

2. ராஜ்யத்தின் வருகை சம்பந்தமாக இயேசு பிரசங்கித்தார் மத் 4:17 எப்பொழுது?

3. இதன் வருகை குறித்து அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். மத் 10:5-7 எப்பொழுது?

4. ராஜ்யத்தின் வருகை குறித்து அந்த 70 பேரும் பிரசங்கத்தினர். லூக் 10:9 எப்பொழுது?

B. "சமீபமாயிருக்கிறது" என்பதின் பொருள் என்ன? மாற்கு 9:1ல்

இங்கே நிற்கும் சிலருடைய வாழ்நாட்காலத்தில் என்று கூறுகிறது.

C. **ராஜ்யம் வந்ததா?**

1. வெளி. 1:10 - யோவான் அதற்குள் இருந்தார்.

2. எபி 12:28- அவர்கள் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

3. கொலோ 1:13-14- இருளைவிட்டு நீங்கி இராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டனர்.

4. 1 கொரி 15:23-25 கிறிஸ்து வரும்போது இராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்.

## IV. சபையும் இராஜ்யமும் ஒரே மக்களைக் கொண்டது.

A. சபையும். இராஜ்யமும் ஒன்றாக பேசப்பட்டுள்ளது. (மத் 16:18-19)

B. சபையும், இராஜ்யமும் வெவ்வேறாக இருக்க முடியாது. ஏனெனில், கிறிஸ்து சபையைக் கட்டி, அதன் பிறகு. இராஜ்யத்தின் திறவுகோலைக் கொடுத்துள்ளார்.

## VII சபையாகிய இராஜ்யத்தில் அங்கத்தினராவதற்குச் செய்ய வேண்டியவை

A. கேள்விப்படுதல் - ரோமர் 10:17.
B. விசுவாசித்தல் - எபி. 11:6, யோவா 8:24 அப்.16:31, ரோம. 5:1
C. மனந்திரும்பிதல் - லூக் . 24:47: 13:3,5, அப்.17:30-31:26:20.
D. அறிக்கையிடுதல் - மத். 10:32-33. ரோம10:9-10. 1தீமோ 6:12.
E. ஞானஸ்நானம் பெறுதல் - 1). இரட்சிக்கப்படும்படியாய் மாற்16:16.
2). பாவமன்னிப்புக்காய் - அப். 2:38
3). கிறிஸ்துவுக்குள் வர, - கலா. 3:26 கிறிஸ்துவை தரித்துக்கொள்ள.
4). புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ள, ரோமர் 6:4
5). இது தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படுதல். கொலோ 2:13.

F. இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சரீரமாகிய சபையில் சேர்க்கப்பட்டார்கள். (எபே 4:4 எபே 1:22.23. 1 கொரி. 12:13)

1. அப். 2:47
2. அப். 5:14:11:24.

## முடிவுரை

1. சபையானது கிறிஸ்துவின் சரீரம், கணவன், மனைவிக்கு இடையே எப்படிப்பட்ட உறவு இருக்கிறதோ அதே உறவு சபைக்கும், கிறிஸ்துவுக்கும் உண்டு.

2. சபை, "தேவனுடைய வீடு" அல்லது "மறுபடியும் பிறந்தவர்களைக் கொண்ட தேவனுடைய குடும்பம்" அவர்கள், அவருடைய குமாரரும், குமாரத்திகளும் ஆக்கப்படுகிறார்கள்.

3. சபை, "உலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள் அல்லது இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டவர்களைக் கொண்ட "தேவனுடைய ராஜ்யம்" (அப். 2:41,47; கொலோ 1:13-14)

4. நாமனைவரும் இயேசுக் கிறிஸ்துவினுடைய சபையை நேசித்து, கனப்படுத்தி, மேன்மைப்படுத்த முயற்சிப்போமாக!.

Toney L. Smith EZSR


# அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி* **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை* (112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

**பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.**

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 20/-

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***

தபால் பெட்டி எண் 28, காங்கயம் - 638 701.

*குறிப்பு : தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# சிற்றின்பத்தால் சிதைந்து போனவன்

வாழ்க்கை எனும் மலையின் சிகரத்தை சீக்கிரமாய் அடைய வேண்டும் என்ற சீரிய சிந்தையோடு சலிக்காமல் செயல்படும் எனக்கன்பான வாலிப வாசகர்களுக்கு. கொல்கதா குன்றின் சிகரத்தில் குருதியை. தன் தந்தையின் சித்தப்படி சிந்திய குணசீலராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சிற்றின்பத்தின் மீது மோகம் கொண்டு சீரழிந்து போகக் கூடிய அபாயம் கொண்ட பருவமிது. அசட்டுத் தைரியம் கொண்டு தம்மை அழித்து விடும் பழக்கத்திற்கு இப்பருவத்தில் தமது செல்வங்கள் அடிமைகளாகிவிடக் கூடாது என நினைப்பார்கள் பெற்றோர்கள். நினைப்பதோடு நில்லாமல் நடைமுறைப்படுத்துவார்கள் நல்லப் பெற்றோர்கள்.

வாலிபக் காலத்தில் தேவன் மீது வைராக்யம் கொண்டு, மலைப்போல் வந்த பகைவனை ஒரு சிறுகல்லைக் கொண்டு இஸ்ரவேலின் தேவனின் நாமத்தினால் மடுவாக்கிய இளைஞன் தாவீது தமது சங்கீதத்தில், "வாலிப வயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங் 127:5) என்கிறார். சீராய் சித்தரிக்கிறான் சங்கீதக்காரன். அம்பின் வேகம் அதை எய்கிறவனின் பலத்தை பொருத்தது என்பது தெரிந்த உண்மை. அதை வாலிபத்தோடு ஒப்பிட்டு, வாலிப வயதில் நம் நினைவுகள், செயல்கள், முடிவுகள் இவைகள் நாம் எதினால் நடத்தப்படுகிறோமோ அதைப் பொருத்தது என்பதை மிக நேர்த்தியாய் தெளிவுபடுத்துகிறான். நாம் நெறிதவறாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக. தன் இஷ்டப்படி எல்லாம் நடந்து, தேவன் தந்த ஈவை இழந்து சிற்றின்பத்தின் மீது மோகம் கொண்டு, பகைவரின் வஞ்சக வலையில் விழுந்து. சிதைந்து போன **"சிம்சோன்"** நமக்கு எடுத்துக்காட்டாக முன் நிற்கிறான். சற்று அவனைப் பற்றி ஆராய்வோம் வாருங்கள்.

### *பரிசுத்தம் இழந்து பாவத்தில் வீழ்ந்தான்*

ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குதத்தத்தை யோசுவாவை கொண்டு, நமது வாக்கு மாறாத தேவன் ஒரு குறைவுமின்றி நிறைவேற்றி முடித்தார் (யோசுவா 21:45) இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தை இனிதே சுதந்தரித்தனர். யோசுவாவின் மரணத்திற்கு பின்பு தேவனிடம் இருந்த இசைவை இழந்து, அவருடைய பிரமாணத்தை விட்டு விலகும் போதெல்லாம் வேறே ஜனத்திற்கு அவர்களை ஒப்புக் கொடுப்பார். தமது ஜனத்தின் மீது அளவற்ற இரக்கம் கொண்ட தேவன் அவர்கள் மனந்திரும்பும் போது மனமிரங்கி, ஒரு நியாயாதிபதியை எழும்ப செய்து அவர்களை மீட்பார். அந்த பட்டியலில் பதின் மூன்றாம் இடத்தை பிடிக்கிறான் நம் கட்டுரையை அலங்கரிக்கும் சிம்சோன்.

சிம்சோன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்தெடுக்கபட்டவன். அவன் மனோவாவின் குமாரன். சிம்சோன் என்ற

பெயருக்கு **"சூரியனைப் போன்றவன்"** என்பது பொருள். தன் வாழ்க்கையிலும் அவன் அப்படிதான். பகைவரை பந்தாடுவதில் சூரியனின் கதிரைப்போல் பட்டவர் மேனி எல்லாம் சுட்டெரிக்கும் சீற்றம் கொண்டவன். தாம் பரிசுத்தராய் இருப்பது போலவே. தம்மை அண்டினோர்களும், பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதே தேவனின் மட்டில்லா ஆசை (I பேதுரு 1:16)

பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்கள் மீது ஆதிக்கம் செலுத்திய காலமது. இவனைக் கொண்டு இஸ்ரவேலை இரட்சிக்க வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருந்தார். இவனோ கண்களால் பார்த்த கன்னியை நினைத்துக் கொண்டே, கர்த்தரை மறந்தவனாகி, விழியின் வழியிலே நடந்தான். (நியா 14 :1-20). போர் முரசின் பேரோசை கேட்டால் வேங்கையென பாயும் வீரனாய் இருந்தவன் வேசியிடம் வேண்டிப் போனதால் வேட்டையாடப் பட்டான் (நியா 16:1-4) அண்ட சராசரங்களையும் படைத்த அநாதி தேவனுக்கு ஆலயமொன்று கட்டவேண்டும் என்கின்ற அளவில்லா ஆசை கொண்ட தகப்பனின் கனவுகளை, தேவனிடத்திலிருந்து பெற்ற விசேஷித்த ஞானத்தினால், குறைவின்றி நனவாக்கிய சாலமோன் விளம்புகையில், "அவள் வீடு பாதாளத்துக்கு போகும் வழி: அது மரண அறைகளுக்கு கொண்டு போய்விடும்" (நீதி 7:27) என்கிறார்.

தெலீலாள் என்கின்ற பெண்ணிடம் தெளிவற்றவனாய் அன்பு வைத்து அவளை தேடி போனதால் தெய்வத்திடம் பெற்ற பராக்கிரமத்தை தொய்வுறச் செய்து தன் அலங்காரத்தை இழந்தான் (நீதி 20:29) தேனிலும் தெளிதேனிலும் மதுரமான வேதாகம நெறியை விட்டு, தேனிட்ட பலாச்சுளையாய் இனிக்கும் என்று, சில நிமிட சுகத்திற்காக கற்பைக் கடைச்சரக்கென கருதி கவிழ்ந்து போனான்.

இதைக் குறித்து வாலிபர்களிடம் உரையாடுகையில் உள்ளத்திலிருந்து அடுக்கு மொழியில் மிடுக்காய் வரும் வார்த்தைகள் இவைகள், "மனத்தை அடக்கிட கனைத்துக் கொண்டும் சமாளிக்கின்றோமே; அனைத்தையும் மீறி அணையுடைத்து எழும் வெள்ளம்போல் அல்லவா அந்த உணர்வு பீறிட்டுக் கொள்கிறது", என்கின்றனர். உணர்வு வருவதில் தவறேதும் இல்லை. ஆனால் அவைகளை வேத வசனமென்னும் அணையிட்டு தடுப்போமானால் இடறி விழாமல் இருப்போம், என்பதில் ஐயமேதுமில்லை. சீறிவந்த சிங்கத்தின் வாயை சிரமமின்றி சிதைத்த சிங்கார வாலிபன் சங்கீதத்தில் எழுதுகையில், "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங் 119:11) என்று வெளிச்சமிட்டுக் காட்டுகிறான். இவ்வழியை நாமும் பின்பற்றுவோம்.

### *நசரேய விரதத்திலிருந்து வீழ்ந்து போனவன்*

சிம்சோன் தன் தாயின் கருவில் உருவான போது தேவனுடைய தூதன் நசரேய விரதத்துக்கென்று அவனை நியமிக்கும்படி நிதானமாய் அவன் தாயிடம் எடுத்துரைத்தான் (நியா 13:7) சட்ட புத்தகங்களில் ஒன்றான எண்ணாகமத்தில் நசரேய விரதத்தைக் குறித்த சட்டங்களை நாம் படித்தறியலாம். அவைகளை

சுருக்கமாக சொல்வோமானால் தித்திக்கும் திராட்ச பழரசத்தைத் தீண்டலாகாது. மயக்கும் மதுபானத்தை மறந்தும் அருந்திடக் கூடாது. சவரகன் கத்தி சிரசின் மேல் படலாகாது. பிணத்தின் பக்கத்தில் போவதும் சரியாகாது (எண்:6)

நசரேய விரதமிருந்த நியாயாதிபதி திராட்சத் தோட்டத்தின் வழியாய் சென்றது அவன் செய்த முதல் தவறு (நியா 14:5) செத்த சிங்கத்தின் சடலத்தை. தேனின் தித்திப்பை ருசிக்க வேண்டும் என்பதற்காய் தொட்டது இரண்டாம் தவறு (நியா 14:8,9) விளையாட்டு தனமாக வினை அறியாது தெலீலாளிடம் தன் பராக்கிரமத்தை பற்றி பொய் சொல்லி வந்ததும் தவறு (நியா 16:6, 7-10,11,13) தன்னிடம் அன்பு வைத்தவனிடத்தில் தந்திரமாய் அவனது பராக்கிரமத்தின் பதிவிடத்தை பக்குவமாய் கேட்டறிந்து இட்டபணி செவ்வனே செய்து முடித்தாள். அல்லிமலர் என நினைத்து கள்ளியிடம் போனதால் வந்தது வினை. முடியிலிருந்த பராக்கிரமத்தை மொட்டையடித்து முடித்து வைத்தார்கள் பெலிஸ்தர்கள். பார்த்தீர்களா பலனை, கண்ணிரண்டால் கன்னியைக் கண்டு களிப்புறலாம் என எண்ணின சிம்சோன் கண்ணின்றி கயவர்களிடம் கதறி நின்றான் (நியா 16:21) வேல் பிடித்த கைகள் இன்று மாவரைக்க பகைவரின் உரல் பிடிக்க நேர்ந்தது. ஐயகோ! என்ன பரிதாபம்! பரமனை மறக்காமல் இருந்தால் பாவிகள் இப்படி கெக்கலிக் கொட்டி சிரித்திருக்கமாட்டார்களே.

மாய்த்து விடவேண்டும் என பகைவர்கள், சிம்சோனின் கையிரண்டும் காய்த்து போகும்படி கயிறால் கட்டி இழுத்து, வேடிக்கைப் பொருளாக தங்கள் கேளிக்கைக்கு துணையாக தூண்களின் நடுவே நிறுத்தினார்கள் (நியா 16:25) வேடிக்கை காட்டியவன் வேதனையடைந்து இஸ்ரவேலின் வேந்தனாம் யெகோவா தேவனிடம் "**ஒரு விசை மாத்திரம்**" என் குரலிசை கேட்டிடும் ஐயா, பேலியாளான பெலிஸ்தியர்களுக்கு கடைசி தரம் உம் பலத்தினால் ஒரு கூலி கொடுத்து விடுகிறேன் என கூக்குரலிட்டபின் சீறும் சிங்கமென மாறி, பாயும் புலியென தேறி, அம்பிலிருந்து விடுபட்ட வில்லென விரைந்து, கைகளின் அருகே இருந்த தூண்களை அடியோடு பிடுங்கி எறிந்தான் (நியா 16:28,29) தூணை தூரோடு தூக்கி எறிந்ததால் தூள் தூளானது அவர்கள் இருந்த இடம், அவன் வாழ்க்கையின் விளிம்பினில் வாழ்வித்த இறைவனிடம் தாள் பணிந்து மன்றாடியதால் வாழ்க்கையில் கொன்றதைக் காட்டிலும் சாகையில் கொன்றது அதிகம் என விளம்புகிறது வேதம் (நியா 16:30)

தேவனை விட்டு சீக்கிரமாய் விலகி சிற்றின்பத்தின் பிடியில் சிக்கின படியால் "**சிதைந்து போனான் சிம்சோன்**" சரீரத்தில் சிதைந்து போனாலும், சிதைந்து கிடந்த தன் விசுவாசத்தை தான் சிதையும் முன்னே புதுப்பித்தான். ஆகவேதான், விசுவாச வீரர்களின் பட்டியலில் இவன் காணப்படுகிறான் (எபி 11:32) வாலிபர்களாகிய நாம் வழி தவறி நடந்தாலும், எஞ்சிய வாழ்க்கையை வீணடிக்காமல், இறைவனிடம் திரும்பி, கெஞ்சி மன்றாடி, அவர் இட்ட கட்டளை எல்லாம் கடலலைப் போல் ஓயாமல் கருத்தில் கொண்டு கனிவாய் நடந்திடுவோம். காலம் கடந்து விடும் முன்னே, நம்மை படைத்தக் கர்த்தரை நினைத்திடுவோம் (பிர. 12:1)

**ஜே. பிக்கின்ஸ்**

# சபையை ஸ்தாபித்தது யார்?

நான் ஒரு வீட்டை கட்டினால், அதன் கிரயத்தை செலுத்துவேன். அந்த வீடு எனக்கு சொந்தமாயிருக்கும் மேலும் அது என் பெயரை தரித்ததாயிருக்கும். நான் ஒரு மாருதி காரை வாங்கினால், அதின் கிரயத்தை செலுத்துவேன். மேலும் அது என்னுடைய பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கும். இது உங்களுக்கும், மற்றெல்லாருக்கும் பொருந்துகிற உண்மையாயிருக்கும். இதில் சொந்தம் கொண்டாடுகிற உரிமை தான் நமக்கு வித்தியாசப் படுத்தி காட் டுகிறது.

சீஷனாகிய சீமோன் பேதுருவிடத்தில் சிருஷ்டிகரின் மைந்தனாகிய கிறிஸ்து தன் சபையைக் கட்டுவதாக கூறினார். (மத் 16:18) அதை அப்போஸ்தலர்கள் மூலமாக நிறைவேற்றினார். (அப்:2) அவர் அதை மாத்திரம் செய்யவில்லை. ஆனால் சபைக்காக தனது உயிரையும் கொடுத்தார், என வேதாகமம் விளம்புகிறது (எபே 5:25-27). மேலும் தன் சுய இரத்தத்தினாலே அதைக் கிரயத்திற்குக் கொண்டார். பட்டணங்கள் தோறும் பக்குவமாய் பரமனின் சுவிசேஷத்தைப் பரப்பி வந்த பவுல், எபேசு சபை மூப்பர்களிடம் கூறுகையில், "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" . (அப் 20:28) இப்பொழுது, கிறிஸ்து சபையைக் கட்டியிருந்தால், அதற்காகத் தன் உயிரைக் கொடுத்திருந்தால், தன்னுடைய இரத்தத்தை அதற்கு கிரயமாகச் சிலுவையில் சிந்தியிருந்தால், சபை அவருக்குச் சொந்தமானதாகும். அது அவருடைய நாமத்தில் விளங்கும் அல்லது உரிமைத்துவத்தைக் குறிப்பதற்கென்று அவருடைய நாமத்தைத் தரித்திருக்கும். இது எதைக் காட்டுகிறதென்றால், சபை என்னுடையதோ, அல்லது உங்களுடையதோ, அல்லது வேறு யாருடையதோ அல்ல. நாம் அதற்காக மரிக்கவில்லை நாம் நம்முடைய இரத்தத்தை அதற்கு கிரயமாகத் தரவில்லை. அது நமக்கு சொந்தமானதில்லை எனவே, அது நம்முடையதல்ல. நம்முடைய நாமத்தைத் தரித்ததுமல்ல. எவ்வளவு துணிச்சலிருக்குமானால், நாம் அதை நம்முடைய சபை என்றோ, அல்லது சபையின் உரிமையாளராக ஒரு மனிதனையோ அங்கிகரிப்போம். வேறொருவர் எனது வீட்டை தனது வீடு எனக் கூறினால் எப்படியிருக்கும்? நான் அதைக் குறித்து என்ன நினைப்பேன்? நாம் கர்த்தருடைய சபையை நமது சபை என்போமானாலோ அல்லது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சபையில் அங்கத்தினரானாலோ, கர்த்தர் அதைக் குறித்து என்ன நினைப்பார் என நீங்கள் கருதுகிறீர்கள்? மனிதனால் கொடுக்கபட்ட நாமத்தை

தரித்த ஒரு சபை, அதன் அங்கத்தினராகும்படி சட்ட திட்டங்களை உருவாக்குகிறது. மனிதர்களை தங்கள் சட்டங்களின் படி அங்கத்தினராக அனுமதிக்கிறது. ஒரு மனிதனை அந்த சபைக்கு தலைவராகக் கொண்டிருக்கிறது. அதன் அமைப்பு, வேதாகமத்தில் காணப்படாத சில அலுவல்களை உடையதாயிருக்கிறது. அதன் ஆராதனை முறைமை, வேதாகமத்திற்கு அந்நியமான சில காரியங்களை உள்ளடக்கியதாயிருக்கிறது. அது எப்படிபட்ட சபையாய் இருக்கிறது என்று பாருங்கள். கண்டிப்பாக அது கர்த்தருடைய சபை அல்ல. அப்படிப்பட்ட சபையில் இருந்து கொண்டு கர்த்தருக்கு ஏற்றவர்களாக நாம் இருக்கிறோம் என்று ஒரு நொடிக்காவது எப்படி நாம் சிந்திக்க முடியும்? அந்த சபையில் இருந்து கொண்டு நாம் பரலோகம் போக முடியும் என்று எப்படி நினைக்க முடியும்?

சிந்தித்து பாருங்கள் ! கிறிஸ்து "எனது சபையை கட்டுவேன்" என்றார் - சகைகளையல்ல. ஆனால் அவர் சொன்னதோ ஒரே சபை, அது அவருடைய சபை. இது எவ்வளவு எளிதாயிருக்கிறது, ஆனால் மனிதன் அதனை நிராகரித்து விட்டான். நூற்றுக்கணக்கான சபைகள், எதிலும் சேராத தனிப்பட்ட சபைகளென்று சொல்லுகிறார்களே அதையும் சேர்த்து ஆயிரக்கணக்கில் சபைகள் உள்ளன. அதைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். பின்பு, பவுல், ஒரே சரீரம் தான் உண்டு என்று கூறினார் (எபே 4:4) மேலும் அவர், அந்த சரீரம் தான் சபை என்றும் கூறுகிறார். (எபே 1:22,23, கொலோ 1:28) ஆனால் அதே பத்தியில், அவர் ஒரே சரீரம் உண்டென்றும், ஒரே தேவனும், ஒரே கர்த்தரும், ஒரே ஆவியானவரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்றும் கூறுகிறார். இவைகளிலெல்லாம் ஒன்று தான் உண்டு என்றால், சரீரமாகிய சபையும் ஒன்று தான் இருக்க முடியும். மேலும் கண்டிப்பாக அவைகள் ஒவ்வொன்றிலும் ஒன்று உண்டு. ஒன்று என்பது ஒருமையைக் குறிக்குமானால், நிச்சயமாக அதனை நம்மால் புரிந்து கொள்ள இயலும்.

கர்த்தர் கட்டுவதாக வாக்கு தத்தம் பண்ணின, கட்டி முடித்த அந்த சபை, வேதாகமம் முழுவதும் அடையாளம் காட்டபடுகிறது. ஒருவன் செய்ய வேண்டியதெல்லாம் வேதாகமத்தை அலசி ஆராய்வதும், இன்றைய உலகில் அந்த சபை உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள, அதன் அடையாளங்களை தெரிந்து இருப்பதும் அவசியம். அதே நேரத்தில், வேதாகம அறிவும், எது சபை என்றும், எது சபை அல்ல என்றும் தெரிந்திருந்தால் ஒரு சபை எப்பொழுது கர்த்தருடைய சபை அல்ல என்பதையும், ஒருவன் தெரிந்து கொள்வான். உலகில் அநேக மக்கள் இருக்கின்றனர். ஆனால் அனைவரும் வித்தியாசமானவர்கள். அநேக பெண்கள் உள்ளனர். ஆனால் ஒரு மனிதன் ஒரு மனைவியைத் தான் கொள்ள வேண்டும். அது யாரென்று அவனுக்கு தெரிந்திருக்கும். அதை போலவே, பெண்களும் ஒரு புருஷனை கொள்ள வேண்டுமென்பதும், அது

யாரென்று அவளுக்கு தெரிந்திருக்கும் என்பதும் உண்மை. உலகில் அநேக சபைகள் உள்ளன. ஆனால் கிறிஸ்துவோ ஒரே சபையை, ஒரே மணவாட்டியை உடையவராயிருக்கிறார். மேலும் அந்த ஒரே சபை அல்லது மணவாட்டி மற்றவைகளைக் காட்டிலும் வித்தியாசப் பட்டிருக்கிறது.

கவனியுங்கள்! கிறிஸ்து ஒரே சபையை உடையவராயிருக்கிறார். அவரே அதன் இரட்சகராயிருக்கிறார் (எபே 5:23) எனவே, நாம் பரலோகம் செல்ல வேண்டுமெனில், அந்த சபையில் நாம் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டும். ஒரு நாள் அவர் அதைப் பெற்றுக் கொள்ளவும், அதை பரலோகத்திற்கு எடுத்து செல்லவும் திரும்ப வருவார். (யோவா. 14:1-16, I கொரி 15:24). கர்த்தர் கட்டிய அந்த சபையில் நீங்கள் ஒரு அங்கத்தினரா? இல்லையென்றால், நீங்கள் அங்கத்தினராகும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். இரட்சிக்கபடும்படி நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால், நீங்கள் அங்கத்தினராகலாம். (மாற்கு 16:16) பிறகு கர்த்தர் உங்களை தனது சபையில் சேர்த்துக் கொள்வார் (அப் 2:47) அவருடைய சித்தத்திற்கு உங்களை ஒப்புக் கொடுப்பதில் தவறேதும் செய்யவில்லை எனில், அவருடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வதில் கர்த்தர் தவறேதும் செய்யமாட்டார்.

**J.C. *சோட்.***

## ஸ்தேவானின் மரணம்!!

1. பயமுறுத்தும் கூட்டம் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்!
2. கர்த்தரின் மேல் எத்தனை, அன்பு, எவ்வளவு விசுவாசம்
3. அவனுக்கு நியமிக்கப்பட்டதில் எத்தனை பொறுப்பும், அர்ப்பணிப்பும்,
4. எந்த நிலையிலும் உண்மையை பேசக்கூடிய தைரியம்.
5. தன் பிரசங்கத்தை கேட்டவர்களுக்கு உண்மையை தெரிவிக்க வேண்டும் என்பதின் நோக்கத்தின் மூலம் அவர்கள் மீது வைத்த அன்பை வெளிப்படுத்தினார்..
6. கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், சமாதானம்,
7. பவுலைப்போல, ஸ்தேவானும் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவன் தேகத்தில் இருப்பதைவிட மரித்து கிறிஸ்துவோடிருப்பது. நலமென கருதினான் (பிலி1 : 21-23)
8. உண்மையாக, ஸ்தேவானின். வைராக்கியமுள்ள சரீரத்திலும். வாழ்க்கையிலும் மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார் (பிலி 1:20)
9. நம் ஒவ்வொருவரைக் குறித்தும் இவைகள் சொல்லப்படுவதாக!!! அதற்கு ஏதுவாய் நடப்போமாக!

# அன்பின் தோற்றம்

இருபது ஆண்டுகள் தொடர்ந்து நாள்தோறும் கணவன் தன் மனைவிக்கு ஒரு அழகான கவிதையை எழுதிக் கொடுத்துக் கொண்டு வந்தார். ஒரு நாள் அவர்கள் விவாகரத்து செய்யும்படியான சூழ்நிலை வந்த போது விசாரணை நீதிமன்றத்துக்குச் செல்கின்றது. விசாரணையின் போது தான் மணவாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக இந்தக் கவிதைகளை எழுதவில்லை என்றும், அதிகாரம் செலுத்தி வந்த தன் மனைவியை அமைதிப்படுத்தும் முயற்சியில் தான் இந்தக் கவிதைகளை எழுதியதாகவும் கூறினார். விவாகரத்தை அனுமதித்த நீதிபதி கூறினார். இவர்களின் மன உறவு வெறும் அன்பின் தோற்றத்தை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் உண்மையான அன்பு காணப்படவில்லை என்று கூறினார்.

இன்றைய கிறிஸ்தவர்களின் நடுவே கூட உறவுகளில் இப்படிப்பட்ட பிளவுகள் காணப்படுகிறது. உள்ளான கசப்பு, கோபம் ஒரு நாள் எரிமலையைப் போல் வெடித்து கிளம்புகிறது. அன்பு செலுத்துவதாக நடிப்பது கடினமாக இருக்கிறது என்று கூறி பல ஆண்டுகளாக மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை வாழ்ந்தது போலக் காணப்படும் தம்பதிகள் கூட ஒரு நாள் பிரிந்து போகிறார்கள். அப்படியானால் அன்பின் தோற்றத்தை காண்பிக்காமல் உண்மையான அன்பு செலுத்துவது எப்படி?

## உண்மையான அன்பு செலுத்துவது எப்படி ?

உண்மையான அன்பு செலுத்துவதைக்குறித்து யோவான் ஆசிரியர் கூறுவதைக் கேளுங்கள் (I யோ 3:18) என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல,கிரியையினாலும் உண்மையினாலும் அன்புக்கூற கடவோம் என்று கூறுகிறார். தேவசாயலின் படைப்பாகிய ஆதாம் ஏவாளின் கர்ப்பப் பிறப்பாகிய காயீன், ஆபேலின் அ;ன்பின் தோற்றத்தை வேதாகமம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆபேலின் மீது தான் கொண்ட பொறாமை உணர்வை காயீன் மறைத்து அன்பு காட்டுவது போல நடந்தாலும் அது கோபமாக வெளிப்பட்டது. காயீனுடைய முக நாடி வேறுபட்டதை நாம் காணமுடிகிறது. அந்தக் கோபமே கொலையாக மாறியது (ஆதி 4:5 முதல் 8 முடிய) ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றை கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி, உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முக நாடி ஏன் வேறுபட்டது? காயீன் தன்

சகோதரனாகிய ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி அவனைக் கொலை செய்தான்.

ஆகவே தான் பவுல் கூறுகிறார். இந்த அன்பு மாயமற்றதாயிருக்க வேண்டும் என்கிறார். (ரோ. 12:9-10) ஏனென்றால் இந்த மாயமற்ற அன்பை தேவன் நம்மீது செலுத்தியதால்தான் அவருடைய சொந்தக் குமாரனையே நமக்காக பலியாக ஒப்புக் கொடுத்தார். (I யோ. 4:9-10) நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனையே அனுப்பினதாலே அன்பு உண்டாயிருக்கிறது. இந்த அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. (வசனம் 7) இயேசுகிறிஸ்து கூட நாம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் என்கிறார். (யோ. 13:35)

உண்மையான அன்பு செலுத்துபவன் மற்றவனை அற்பமாய் எண்ணமாட்டான். (ரோ - 14:10) இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. ஆனால் இப்பொழுது நடப்பது என்ன? தன்னிடத்தில் உள்ள குறைகளையும், தவறுகளையும், பாவங்களையும் மறைப்பதற்காக மற்றவர்களை அற்பமாய் எண்ணுவதும் குற்றவாளியாக்குவதும் உதாசீனப்படுத்துவதும் தான் நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் தேவன் நம்மை இப்படி நினைத்திருந்தால் நாம் இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்ல முடியாத சூழ்நிலை வந்திருக்கும். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக நம்மை அற்பணிக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்கள் மீது நாம் உண்மையான அன்பை செலுத்த முடியும். தேவன் நமக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உன்னதமான அன்பின் பிரமாணத்தை கொடுத்துள்ளார். (ரோ- 4:13) அந்த அன்பை முதலாவது நாமும் நம்முடைய குடும்பமும் ருசி பார்க்க வேண்டும். (I யோ 3:22-23) (I யோ 5:3)

நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு: நீங்கள் ஆதி முதல் கேட்டிருக்கிறபடி நடந்து கொள்ள வேண்டிய கற்பனை இதுவே (2 யோ:வ.5) அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் என்று யோவான் சொல்வது போல, மணஉறவிலாகட்டும் அல்லது சக விசுவாசிகளோடுள்ள ஐக்கியத்திலாகட்டும், உண்மையான அன்பு இல்லாவிட்டால் ஒரு நாள் கசப்பும், பிரிவினையும் வந்தே தீரும். ஆகவே ஒவ்வொருவரும் அன்பின் தோற்றத்தைக் கொடுக்காமல், மாயமற்ற அன்பைக் கொடுத்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவோம்.

**சகோ. யோசுவா செல்வம்.**

# பிதாவே இவர்களுக்கு மன்னியும்

இயேசு சிலுவையில் தொங்கும்பொழுது சொன்ன வார்த்தை. "பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" [லூக் 23:34] நான் சிலுவையில் உயர்த்தப்பட்ட பின்பு யாவரையும் என்னிடமாக இழுத்துக் கொள்வேன்; உலகத்தின் பாவங்களை சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி; நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து பலியிடப்பட்டார்; கிறிஸ்து உலக இரட்சகர்; பாவிகளை இரட்சிக்க வந்தார்; அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிக்க முடியாது; இது போன்ற ஜீவவார்த்தைகளிலே பிரிவினைச் சபையார்களுக்கு அதிகப் பிரியம், குஷியும் அதிகம். இரட்சிப்புக்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. கிறிஸ்துவே அன்றும் இன்றும் நமக்காக பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்கின்றார். அன்று சிலுவையில் அறைந்த யூதர்களுக்கு மன்னிப்பு அருளினார். நாம் அவரை சிலுவையில் அறையவில்லை. ஆகவே நம்மை அவர் எப்பொழுதும் மன்னிப்பார் என்று தவறான எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்து தன்னை சிலுவையில் அறைய காரணமாயிருந்தவர்களுக்காக பிதாவினிடத்தில் வேண்டிக்கொண்டார். இது உண்மை. பிதா அவர்களை உடனே மன்னித்தாரா? இல்லை. பிதாவின் சித்தம் வேறு விதமாக இருந்தது பிதாவின் சித்தம் என்ன? பெந்தேகோஸ்தே நாளில் பலநாடுகளிலிருந்த யூதர்கள் எருசலேம் தேவ ஆலயத்திற்கு வந்திருந்தார்கள் அன்று பேதுரு யூதர்களை குற்றம்சாட்டினான். ஜீவாதிபதியை நீங்கள் கொலை செய்தீர்கள். தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்கள் யாவரும் சாட்சி என்றான். இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். நீங்களோ அந்த இயேசுவை பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணி அடித்து கொலை செய்தீர்கள். ஆனாலும் நீங்கள் சிலுவையில் அறைந்த அந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள். இதை அவர்கள் கேட்டபொழுது

இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி. பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான் இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி. மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டோர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர். சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். சிலுவையில் தொங்கும்பொழுது கிறிஸ்து வேண்டிக் கொண்டதற்கு பிதா பெந்தெகோஸ்தே நாளில் பதில் அளித்தார். பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றவர்கள் மன்னிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்துவே உலக இரட்சகர்; உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிறவர்; அவராலேயன்றி இரட்சிப்பு இல்லை: அந்த இரட்சிப்பு கிடைக்க மக்கள் கிறிஸ்துவினிடத்தில் வரவேண்டும். வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். இளைப்பாறுதல் வேண்டுமானால் அவரிடத்தில் ஒவ்வொருவரும் செல்ல வேண்டும். அவருடைய கட்டளைப்படி நடக்க வேண்டும். கிறிஸ்து நமது இரட்சிப்பிற்காக எல்லாம் செய்து விட்டார். இது உண்மை, ஆனால் அந்த இரட்சிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் கிறிஸ்துவினிடத்தில் வரவேண்டும்; அவரை விசுவாசிக்க வேண்டும்; மனந்திரும்ப வேண்டும்; பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவெண்டும். ஞானஸ்நானம் பெற்ற இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு சபை அல்லது பரலோகத்தின் வாசல் திறக்கப்படுகிறது. அன்று முதல் இரட்சிக்கப்பட்டவன் அவர் சபையில் அவரால் சேர்க்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டிருக்கிறான். புது சிருஷ்டி, புது ஜீவியத்தை கிறிஸ்துவுக்குள் தொடர்கிறான். கிறிஸ்துவுக்குள் மரிக்கும் பொழுது "பாக்கியவான்" என்று குறிப்பிடப்படுகிறான்.

*சகோ. ஞானம்*
*மலேசியா*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, APR 99
APR 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.**

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

TO

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.